# இராஜாங்கனை பிரதேச சபை

## அனுராதபுரம் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 21 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 16 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 06 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள இராஜாங்கனை பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட காகிதாதிகள் இருப்பின் பெறுமதியான ரூபா 95,385 எஞ்சிய இருப்பாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 300,000 தொகை மற்றும் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் ரூபா 75,000 தொகை பிழையான வகையில் செலவினக் கணக்குகளில் முறையே வரவு மற்றும் செலவு வைத்தமையின் காரணமாக செலவினம் ரூபா 225,000 அதிகரித்தும் பொறுப்புக்கள் ரூபா 75,000 இனாலும் வருமானக் கடன்பட்டோர் ரூபா 300,000 இனாலும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நிலுவை நீதி மன்றத் தண்டப் பணக் கிடைப்பனவு ரூபா 1,369,000 தொகை மீளாய்வாண்டின் பெறுவனவாக கணக்கு வைக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டின் வருமானம் மற்றும் வருமானக் கடன்பட்டோர் அந்தப் பெறுமானத்தினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 142,037 கூட்டுத்தொகையான மீண்டெழும் செலவினம் நிலையான சொத்தாகக் கணக்கு வைக்கப்பட்டமையினால் அந்த பெறுமானத்தினால் நிலையான சொத்துக்கள் மற்றும் அந்த பெறுமானத்தினால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு அதிகரித்தும், மீண்டெழும் செலவினம் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தன.

(உ) ரூபா 538,664 தொகை கையிலுள்ள இருப்பாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவை பௌதீக ரீதியில் சபையிடம் காணப்படவில்லை.

(ஊ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் தவணைப் பணமாக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 201,302 தொகை வட்டிச் செலவினமாகக் காண்பிக்கப்பட்டமையினால் ஆண்டின் செலவினம் மற்றும் கடன் கணக்கின் மீதி அப்பெறுமானத்தினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) ஐந்தொகையில் மொத்தச் சொத்துக்களின் கூட்டுத்தொகை மொத்த பொறுப்புக்களின் கூட்டுத்தொகையை விட ரூபா 991,227 இனால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்ததுடன் பரீட்சை மீதியில் காண்பிக்கப்பட்ட 05 வருமான விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 1,024,114 ஆன கிடைக்க வேண்டிய மீதி மற்றும் ரூபா 32,507 தொகையான வைப்பு மீதி என்பன நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

06 கணக்கு விடயங்களின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதிகளுக்கிடையே வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

சபைக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கு முறைமையின் பிரகாரம் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி மற்றும் நிலையான சொத்துக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை என்பன சமமாக இருக்க வேண்டியிருந்த போதிலும் அந்த இரண்டு கணக்குகளுக்கிடையே ரூபா 646,376 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 21,180,817 கூட்டுத்தொகையான 13 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 511,065 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,462,778 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக்கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணத்தில் 10 சதவீத முத்திரைக் கட்டணமான ரூபா 45,691 தொகை அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(ஆ) களஞ்சிய வழங்கலுக்கான கொடுப்பனவுகளைச் செய்யும் போது, உரிய பொருட்கள் உடன்படிக்கையின் பிரகாரம் குறிப்பிட்ட தரத்தில் களஞ்சியத்திற்கு கிடைத்தமையை களஞ்சியப் பொறுப்பு உத்தியோகத்தரினால் வழங்க வேண்டிய சான்றிதழ் 14 சந்தர்ப்பங்களின் போது ரூபா 328,429 கூட்டுத்தொகையான பொருட் கொள்வனவிற்காக வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 02 | 20 | - |
| (ii) | வாடகை | 2,780 | 3,270 | 711 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 901 | 457 | 310 |
| (iv) | ஏனைய வருமானம் | - | 2,282 | 1,778 |

### 2.3.2 வாடகை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 159(i) ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 282,950 தொகையான நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் 20 வருடங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் கடை வாடகை அறவிடப்பட்டிருந்தது.

### 2.3.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் வியாபார முயற்சிகளிலிருந்து அறவிடப்படுகின்ற கட்டணம் திருத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 1,477,796 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 300,000 |

## 2.4 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

வடமத்திய மாகாணத்தின் பிரதம அமைச்சினால் 2008 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 1,743,905 பெறுமதியான அரிசி மாவை அண்மித்த பேக்கரி உற்பத்தித் தொகுதிகள் மற்றும் 02 கைடெக்ரர்கள் என்பன பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

## 2.5 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 132(ஓ) ஆம் பிரிவின் பிரகாரம் விழாக்களுக்காகச் செய்யப்பட்ட ரூபா 25,320 தொகையான செலவினத்திற்காக விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.6 ஒப்பந்த நிருவாகம்

(அ) கிரயம் ரூபா 4,121,411 கூட்டுத்தொகையான 05 நிர்மாணங்களுக்காக மாகாண பொறியியல் திணைக்களத்தின் நிலைமைக் கட்டுப்பாட்டுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கிரயம் ரூபா 2,552,762 கூட்டுத்தொகையாக 03 நிர்மாணங்களுக்காக நிலைமைக் கட்டுப்பாட்டு அறிக்கை சித்திபெறாது காணப்பட்டிருந்தும் அதனைக் கருத்திற் கொள்ளாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) கிரயம் ரூபா 6,664,138 கூட்டுத்தொகையான 11 நிர்மாணங்கள் உடன்படிக்கையின் படி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி மற்றும் வேலை பூர்த்தி செய்யப்பட்ட திகதி என்பன முறையற்ற வகையில் மாற்றப்பட்டிருந்தது. அதன் காரணமாக உடன்படிக்கைக் காலத்தில் பூர்த்தி செய்யப்படாத வேலைகள் மற்றும் அதற்காக அறவிட வேண்டிய தாமதக் கட்டணம் என்பவற்றைத் தீர்மானித்துக் கொள்ள முடியாதிருந்தது.

(ஈ) கிரயம் ரூபா 6,183,955 கூட்டுத்தொகையான 16 வேலைகளின் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி வேலை பூர்த்தி செய்தல் அறிக்கையில் காணப்படாமையின் காரணமாக நிர்மாணங்களின் தாமதக் கட்டணத்தை அறவீடு செய்ய முடியாதிருந்தது.

(உ) ரூபா 3,800,000 தொகையான 03 நிர்மாணங்கள் உடன்படிக்கைக் காலத்தில் வேலை பூர்த்தி செய்யப்படாமையின் அடிப்படையில் அறவிட வேண்டிய தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.7 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) வியாபாரத் தொகுதியில் 34 கடைகளின் சட்டரீதியான உரித்தை சபைக்குப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக வாடகையை அறவீடு செய்ய முடியாதிருந்தது.

(ஆ) சபைக்குரிய கடைகளை வாடகைக்கு விடும் போது முறையான கேள்வி நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் தொடர்பாக ஒவ்வொரு வருடமும் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாமையின் காரணமாக பலசரக்கு வியாபாரங்களிலிருந்து மாத்திரம் ரூபா 50,050 தொகையான வியாபாரக் கட்டண வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கைக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சேவையைக் கைவிட்டுச் சென்ற, மரணித்த, ஓய்வுபெற்ற மற்றும் இடமாறிச் சென்ற 14 ஊழியர்களிடமிருந்து ரூபா 130,867 கூட்டுத்தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு